## ST. THOMAS MOUNT SHRINE ELEVATED AS NATIONAL SHRINE OF INDIA



On 8th January, 2011, Saturday, St. Thomas Hill Shrine at St. Thomas Mount was elevated as a **NATIONAL SHRINE OF INDIA**. His Eminence **OSWALD CARDINAL GRACIAS**, the President of CCBI read out the decree declaring that St. Thomas Hill Shrine as a **NATIONAL SHRINE**, in the presence of His Excellency Archbishop **SALVATORE PENNACCHIO**, the Apostolic Nuncio to India and His Eminence **TELESPORE CARDINAL TOPPO** and all the Archbishops and Bishops of India. After the declaration, His Excellecy Archbishop **SALVATORE PENNACCHIO**, the Apostolic Nuncio Solemnly affirmed the declaration and presented a special Chalice to His Lordship **Rt. Rev. Dr. A. NEETHINATHAN** our Bishop, blessed by His Holiness **POPE BENEDICT XVI** to mark the Solemnity of the occasion. Let us thank God for this great blessing.






*Edited by: **Rev. Fr. N. Louis Rayar,** Chancellor*
*Bishop's House, Chingleput.*

# DIOCESE OF CHINGLEPUT

## NEWS LETTER

website:www.chengaidiocese.org
Email : chengaidiocese@yahoo.co.in
*Ph : 27426649*
*Fax : 27431784*

Vol. 09 No.01 January 2011

## ST. THOMAS MOUNT NATIONAL SHRINE OF INDIA



## ஆண்டவர் செயலிது நம் கண்களுக்கு வியப்பாய் உள்ளது!

## BISHOP'S ENGAGEMENTS

### JANUARY 2011

| DATE | DAY | PROGRAMME | PLACE |
|---|---|---|---|
| 01st | Sat Mor | Mass | Tambaram |
| 02nd | Sun Eve | Church Blessing | Vetavalam |
| 04th | Tue Eve | Mass | Palavakkam |
| 06th -12th | | CCBI Meeting | Poonamallee |
| 08th | Sat Eve | National Shrine - Mass | St. Thomas Mount |
| 14th | Fri Mor | Mass | Coimbatore |
| 15th | Sat Mor | Ordination | Cathedral |
| 16th | Sun Eve | Feast | New Perungalathur |
| 17th | Mon Mor | Feast | Kelambakkam |
| 20th | Thu Eve | Mass | Pallavaram |
| 22nd | Sat Mor | Jubilee Mass | Pavunjur |
| | Eve | Conference Hall Blessing | Krishnankaranai |
| 23rd | Sun Mor | Sponsor's Day | Bishop's House |
| | Eve | Mass | Poonamallee |
| 25th | Tue Eve | Feast | Ramapuram |
| 26th | Wed Mor | BCC Meeting | Pastoral Centre |
| | Eve | Mass | Cathedral |
| 28th | Thu Eve | Mass | Melrosapuram |
| 29h | Fri Mor | Diocesan Pastoral Council | Bishop's House |
| 30th | Sun Mor | Youth Convention | Santhome |
| 31st | Mon Eve | Mass | Tirupattur |

### FEBRUARY 2011

| | | | |
|---|---|---|---|
| 01st | Tue Eve | Silver Jubilee | M.N. Kandigai |
| 02nd - 06th | | TNBC | Santhome |
| 06th | Sun Eve | Mass | Thirisulam |

இறைவனின் அன்னை மரியா ஆலயம் என அழைக்கப்பட்ட இவ்வாலயம் இயேசுவை எதிர் நோக்கிய அன்னை ஆலயம் என்று போர்த்துகீசியரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வாலயத்தின் இன்னொரு சிறப்பம்சம் புனித தோமாவின் விரல் எலும்பு பாதுகாக்கப்படுவதாகும். இவ்வருளீக்கம் இந்திருத்தலத்திற்கு மட்டுமல்ல செங்கை மறைமாவட்டத்திற்கும், இந்திய திருச்சபைக்கும் கிடைத்த மாபெரும் பொக்கிஷமாகும். அது மட்டுமல்ல சுமார் 250 ஆண்டுகள் பழமை வாய்ந்த பதினான்கு ஓவியங்கள் உள்ளன. இதில் இயேசு கிறிஸ்து, புனித பவுல் மற்றும் இயேசுவின் பன்னிரெண்டு சீடர்கள் மற்றும் அவர்கள் எப்படி இறந்தனர் போன்றவை மிகவும் அற்புதமாக வரையப்பட்டுள்ளது.

1986 பிப்ரவரி 5 ம் நாள் மறைந்த திருத்தந்தை 2 ம் அருள் சின்னப்பர் இந்தியாவிற்கு வந்த போது நமது திருத்தலத்திற்கும் வந்து இப்புனித மலை மீது நின்று சென்னை மாநகரை ஆசீர்வதித்தார்.

இத்திருத்தலத்தின் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் வரலாற்றுச் சிறப்பையும் உணர்ந்து 2003 ம் ஆண்டு நமது **ஆயர் மேதகு நீதிநாதன் ஆண்டகை** அவர்கள் இத்திருத்தலத்தை மறைமாவட்ட திருத்தலமாக உயர்த்தி ஆணை பிறப்பித்தார். அது போலவே 2010 ம் ஆண்டு ஜீலை மாதம் தமிழக ஆயர் பேரவை இத்திருத்தலத்தை தமிழக அளவிலான திருத்தலமாக உயர்த்தியது.

2011 ம் ஆண்டு ஜனவரி 8 ம் தேதி இத்திருத்தலம் அகில இந்திய இலத்தீன் ஆயர் பேரவையால் தேசிய திருத்தலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இத்திரு நிகழ்வினை திருத்தந்தையின் இந்திய தூதர் **மேதகு பேராயர் சால்வத்தோரே பெனாக்கியோ** அவர்களும், அகில இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் **மேதகு ஆஸ்வால்டு கர்தினால் கிராசியாஸ்** அவர்களும், ராஞ்சி உயர் மறைமாவட்டப் பேராயர் **மேதகு டெலஸ்போர் கர்தினால் டோப்போ** அவர்களும் தலைமையேற்று நடத்தினார்கள்.

தூய தோமா மலை திருத்தலம் தேசிய திருத்தலமாக உயர்த்தப்பட்ட இத்திருநிகழ்வில் 118 பேராயர்களும், ஆயர்களும் கலந்து கண்டு சிறப்பு செய்தனர்... ***ஆண்டவர் செயலிது நம் கண்களுக்கு வியப்பே!***

தமிழக துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தியதும் மற்றும் அமைச்சர்கள் திரு. சுரேஷ் ராஜன், திரு. தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.



# From Bishop's Desk...

**January 2011**

***My Dear Fathers/Brothers/Sisters,***

Please accept my sincere wishes for a happy, peaceful, fruitful and grace-filled new year. The New Year brings with it many new and varied *opportunities* and *possibilities*. It is up to us to make full use of these opportunities and make the year that has just arrived truly *worth living* and *worth remembering*. Let us join our hands and create a new and better world. Let divisions and discriminations give way to acceptance, unity and equality. Let 2011 be recognised as a God given golden opportunity to transform ourselves and our society.

God gives us a very special gift in this New Year. St. Thomas Mount Shrine will be raised to the status of a National Shrine on 8th January 2011. This historic mountain so rich in faith and cultural heritage certainly deserves this honour. The Diocese of Chingleput will be abundantly blessed when the Apostolic Nuncio, the Cardinals, Archbishops and Bishops of India will gather on this Sacred Hill to celebrate a Solomn Eucharist and declare the Shrine as a National Shrine. May God be praised.

I would like to request your kind prayers for the success of the forthcoming CCBI meeting to be held in Sacred Heart Seminary, Poonamallee from 6th January to 12th January, 2011 (XXIII Plenary assembly). The assembly will focus its attention and deliberate extensively on the important theme of catechetical renewal. Please do keep us all in your prayers so that what we discuss and decide during the coming days will bring about a *renewal in the Church in India*.

God Bless You



**+ Rt. Rev. Dr. A. Neethinathan**
**Bishop of Chingleput**





# NEWS FROM THE PASTORAL CENTRE

## TWO DAYS RETREAT FOR LAY PREACHERS & SCC FIELD WORKERS

Evangelization Commission and ANPIAM (SCC) jointly conducted two days retreat for the Lay Preachers and SCC Field Workers on 4th & 5th December, 2010 at Pastoral Centre. The retreat was preached by Rev. Fr. Michael Selvaraj, Regional Secretary for Evangelization Commission & Holy Childhood. On 5th December we had Christmas celebration in which our Bishop presided over the Holy Eucharist and distributed the Christmas gifts. Nearly 60 participants actively participated in the programme.

## PRIESTS & RELIGIOUS CHRISTMAS GET-TOGETHER

Nearly 450 Religious and Priests serving in our Diocese actively participated in the year's Christmas Get-together, which held on 11th December, 2010 (Saturday) at Pastoral Centre. Being the Year of Youth CRI-CHENGAI donated Rs.85,000/- towards Bishop's higher education fund. We thank CRI-CHENGAI for their co-operation & collaboration for the success of the programme.

## ONE DAY SEMINAR CUM CHRISTMAS CELEBRATION FOR CATECHISTS

On 15th December, 2010 one day seminar was organised for catechists and at the end of the programme they had Chirstmas celebration at Pastoral Centre. More than 145 untrained catechists and trained catechists participated in this programme. Rev. Fr. Sebastian, Regional Secretary for Catechitical Commission, Thindivanam animated the programme. Our Bishop presided over the Holy Eucharistic celebration and distributed Christmas gifts to the Catechists.

## EVENING SCHOOL TEACHERS' CHRISTMAS GET-TOGETHER

On 19th December, 2010 (Sunday) we had Christmas Get-together in our Bishop's House for evening school teachers organized by Rev. Fr. Anthoyraj. Nearly 100 evening school teacher participated in the programme.

## MARRIAGE PREPARATORY COURSE RESOURCE PERSONS' CHRISTMAS GET-TOGETHER

FAMILY COMMISSION Secretary Rev. Fr. Thomas Premkumar, organized Christmas get-together for the resource persons of marriage preparatory course on 19th December, 2010 (Sunday) at Pastoral Centre. Nearly 20 people participated.

**Attention please**

## DIOCESAN PASTORAL COUNCIL MEETING

There will be New Year cum Pongal celebration for Diocesan Pastoral Council member on 29th January 2011 at 9.30 am in the Diocesan Pastoral Centre. Parish Priests are kindly requested to inform your parish Diocesan Pastoral Council members and encourage them to participate in this meeting without fail.

## மறைமாவட்ட மேய்ப்புப்பணிகளுக்கு பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு தொகை

| பள்ளி / இடம் | பங்களிப்பு தொகை |
|---|---|
| ஆர்.சி. தொடக்கப்பள்ளி, நீர்பெயர் | 2,746.00 |
| டாக்டர் ஆர். அருளப்பா மேல்நிலைப்பள்ளி நீர்பெயர் | 7,253.00 |
| புனித சூசையப்பர் மெட்ரிக் பள்ளி, வாலாஜாபாத் | 3,500.00 |
| மொத்த தொகை | **13,499.00** |
| **கூட்டுத் தொகை** | **2,33,301.00** |

**Rev. Fr. George Stephen**
**Director, Pastoral Centre**

## ANPIAM

### REGIONAL MEETING

Regional meeting of Diocesan Secretaries for ANPIAM held on 30.11.2010 (Tuesday) at Bishop's House, Chingleput. In this meeting, 13 Diocesan Secretaries to ANPIAM in Tamilnadu (except Ooty, Salem, Sivagangai and Kumbakonam) participated. Our Bishop addressed the Secretaries, while appreciating the commitment of the secretaries, he insisted on the committed and collaborated effort to faster ANPIAMs in the Region. Then the secretaries openly shared certain situation and gave some suggestion to be presented to TNBC.





***They are as follows:***

1. Bishops could consider ANPIAM Ministry as their top most Pastoral Priority and they can render financial assistance to the Diocesan ANPIAM activities.
2. Since ANPIAM is not one of the commissions, there is a need to co-ordinate the activities of all the commissions, keeping ANPIAM as the focus and the foundation.

*Other important points discussed to promote ANPIAMs in TAMILNADare:*

1. Regional ANPIAM SURVEY
2. Parish coordinators meet
3. Formation of parish pastoral helpers
4. Formation programme to secretaries

After the meeting around 4.00 pm participants were taken to Vedanthangal, the Sanctuary of Birds and Mazhai Malai Madha Arulthalam, Achrapakkam. Our special thanks to Fr. Roche Ignatius and Fr. Leo Edwin for their well arranged dinner.

### பயிற்சி

டிசம்பர் 5 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இராமாபுரம் கிளைப்பங்கான ஐய்யப்பன் தாங்கல் பங்கில் காலை 7.30 மணிக்கு அன்பியத்தை பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. பிறகு இக்கிளைப்பங்கில் உள்ள 10 அன்பியங்களில் புதிய பொறுப்பாளர்களின் தேர்வு நடைபெற்றது.

### மறைவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்

மறைவட்ட அளவில் பங்கு அன்பிய ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம் செங்கல்பட்டு மறைவட்டத்தில் நவம்பர் 11ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மற்றும் நவம்பர் 28 ம் தேதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. செங்கல்பட்டு மறைவட்டத்தில் 29 நபர்களும், காஞ்சிபுரம் மறைவட்டத்தில் 22 நபர்களும் கலந்துகொண்டனர். பல பங்குகளில் இருந்து இக்கூட்டத்தில் பங்கு பெறாதது வருத்தமளிக்கிறது.

### இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட கருத்துக்கள்

1. தொடர் பயிற்சி பங்கு அளவில் தேவை.
2. பங்களவில் ஒருங்கிணைப்பு கூட்டம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.
3. மறைவட்ட அளவிலும் மறைமாவட்ட அளவிலும் அன்பிய மாநாடு நடத்தப்பட வேண்டும்.

4. செயல்படாத அன்பியங்களை சந்தித்து ஊக்குவிக்க வேண்டும்.
5. துறவறத்தார் அன்பியங்களில் ஈடுபட செய்யவேண்டும்.
6. பங்குத்தந்தையர்கள் அன்பியங்களை சந்திக்க வேண்டும்.
7. மாதம் இரண்டு முறை அன்பியக் கூட்டம் நடத்துவதை எல்லா பங்குகளிலும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.
8. அன்பிய மடல் எல்லா அன்பியங்களையும் சென்றடைய ஆவண செய்ய வேண்டும்.
9. பங்கு வழிபாடுகளில் அன்பியங்கள் முன்னின்று வழிநடத்த ஆவண செய்ய வேண்டும்.
10. அன்பியங்களிலும், பங்கிலும் அன்பிய ஆண்டு விழா கொண்டாட வலியுறுத்த வேண்டும்.

இக்கூட்டம் சிறப்பாக அமைய ஒத்துழைத்த பங்குத்தந்தையர்களுக்கும், பங்குபெற்ற அன்பிய பொறுப்பாளர்களுக்கும் எமது நன்றி.

## நடக்க இருப்பவை

### *அன்பிய பொதுக்குழுக் கூட்டம்*

2011, ஜனவரி 26 ம் தேதி 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை அன்பிய பொதுக்குழு கூட்டம் மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெறும். பங்குத்தந்தையர்கள் தங்கள் பங்கு ஒருங்கிணைப்பாளர்கள் ஐவரை தவறாமல் இக்கூட்டத்தில் பங்குபெற செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## மறைக்கல்வி பணிக்குழு

### ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களின் பயிற்சி

நவம்பர் 27 ம் தேதி, சனிக்கிழமை, ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி மேய்ப்புப்பணி மைய்யத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை அருட்பணி. செபாஸ்டியன் (TNBCLC), அருட்சகோதரி. பெரேரா (TNBCLC) அவர்களும் வழிநடத்தினார்கள்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**





## SC/ST பணிக்குழு

- டிசம்பர் 5 ம் தேதி தலித் விடுதலை ஞாயிறானது அனைத்து பங்குகளிலும் சிறப்பிக்கப்பட்டது. மறைமாவட்ட அளவில் செங்கை - பேராலய பங்கில் திருவழிபாடு, பதாகைகள், விடுதலை நடவு கலைக்குழுவினரின் பறையாட்டம், தலித் கிறித்தவ விடுதலைப்பாடல்கள் பாடி கொண்டாடப்பட்டது. இறைமக்கள் விழிப்புணர்வு பெற்றனர். இதில் அகில இந்திய ஆயர் பேரவையின் SC/ST பணிக்குழு செயலர் கோஸ்மான் அவர்களுடன் மறைமாவட்ட செயலர், முதன்மைகுரு மற்றும் பேராலய பங்கு குருக்களும் கலந்து கொண்டனர்.
- டிசம்பர் 6 ம் தேதி வடக்கு மண்டல (சென்னை - மயிலை, செங்கை, வேலூர், பாண்டி-கடலூர்) மறைமாவட்டங்களின் SC/ST பணியக செயலர்கள் இணைந்து இளையோர் ஆண்டை முன்னிட்டு “தலித்” இளையோரை ஊக்குவிக்க “***தலித் கலை விழா***” நடத்த திட்டமிட்டனர். மண்ணின் தலித் கலைகளை நிகழ்த்தும் தலித் கிறித்தவர்களை கொண்ட கலைக் குழுக்களை, கலைஞர்களை மற்றும் கல்வி, அறிவியல், சமூகப்பணி, ஆன்மீகம், விளையாட்டு, தொழில் நுட்பம், கலை இன்னும் பல துறைகளில் சாதிக்கும் இளையோரை சிறப்பு செய்யவும் திட்டமிடப்பட்டது.
- டிசம்பர் 12, 13 ம் தேதிகளில் மாநில மைய்யமான உதயதீபத்தில் கருத்தரங்கம், கூட்டம், அறிக்கைகள் மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் நமது பணியக CBCI & TNBC for SC/ST பணிக்குழு ஆயர் தலைவர் **மேதகு நீதிநாதன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.
- டிசம்பர் 18 ம் தேதி (LIFE) வாழ்வு வலுவூட்டும் மைய பள்ளிக் குழந்தைகள் 30 பேருடன் நமது பணியகம் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடியது. திருமதி. விமலா அவர்களின் அன்பின் பரிசுகளும், நமது ஆயர் அவர்களின் விருந்தோம்பலும் மிக மகிழ்வுடன் நடைபெற்றது. செயலர், களப்பணியாளர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
- நவம்பர் 27 மற்றும் 28 ம் தேதிகளில் “***மாணவர் திறன் வளர் பயிற்சி முகாம்***” இரண்டு நாட்கள் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. 9 ம் வகுப்பு பயிலும் சிறந்த மாணவ-மாணவிகளை 34 பங்குகளிலிருந்து தேர்வு செய்ததில் 27 மாணவ-மாணவிகள் (ஆண் 12

நபர்கள், பெண் 15 நபர்கள்) கலந்து கொண்டு பயன்பெற்றனர். இனி ஒவ்வொரு மாதமும் இந்த முகாம் நடைபெறும். அருட்பணி. ஐசக் ஜெகநாதன், திரு. பாபு, திரு. தாமஸ், திரு. தினேஷ், திரு. மார்டீன் மற்றும் அருட்சகோதரி ராணி, சோபியா, மரியா கருத்தாளர்களாக வந்து சிறப்பித்தனர். நமது ஆயர் மற்றும் மாநில செயலர் அருட்பணி. தேவசகாயராஜ் அவர்கள் கலந்து கொண்டது சிறப்பிக்கத்தக்கது.

## வாழ்த்துகள்

**அகில இந்திய ஆயர் பேரவை** SC/ST/BC **தலைவராக** நமது மறைமாவட்ட **ஆயர் மேதகு நீதிநாதன்** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். திறம்பட நீதி வழி நின்று போராடும் ஆன்மீகம் கொண்ட ஆயர் அவர்களை வாழ்த்துகிறோம்.



- தமிழக அரசு செப்டம்பர் 29 ம் தேதி வேலூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும், வேலூர் சமூக சேவை மையத்தின் இயக்குநருமான **அருட்பணி. லூர்துசாமி அவர்களை தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலக்குழுவில் உறுப்பினராக** அரசாணை நிலை எண் 119 இன்படி மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு நியமித்துள்ளது. இதன் மூலம் 2010 முதல் 2012 ம் ஆண்டு வரை இவர் பணியாற்றவுள்ளார்.
- இக்குழுவின் தலைவராக மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும் பதவி வகிக்கின்றனர். ஏனைய ஆதி திராவிட பழங்குடியினர் தொகுதியில் வெற்றிப் பெற்றுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இந்நலக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக உள்ள அமைப்புகள், நிறுவனங்கள், நலத்திட்டங்கள் போன்றவற்றை ஆய்வு செய்து அரசுக்கு இந்நலக்குழு வழிகாட்டுதலை வழங்கும். தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள ஆதி திராவிடர் மதம் மாறிய ஆதிதிராவிட மக்கள் நலத்திட்டங்களைக் கண்காணிக்கவும், உரிய அறிக்கை அளிக்கவும் இவ்வுறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. தமிழ்நாடு அரசு இந்நியமனச் செய்தியை இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும்





அனுப்பியுள்ளது. தமிழக அரசின் ஆதி திராவிடர் நலக்குழுவின் தலித் கிறித்தவர்களுக்காக நியமிக்கப்பட்டு, இதுநாள் வரை சிறப்பான முறையில் இம்மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகின்ற இந்திய ஆயர் பேரவையின் SC/ST பணிக்குழு முன்னாள் செயலாளரும், வேலூர் மறைமாவட்டப் பணியாளருமான அருட்பணி. லூர்துசாமி அவர்களை பாராட்டுகிறோம்.

- சென்னை - மயிலை உயர் மறைமாவட்டம் SC/ST பணியகத்திற்கான ***"தலித்தாகம்"*** என்னும் தலைப்பைக் கொண்டு புதிதாக தொடங்கியுள்ள செய்திமடலுக்காக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு 100 தலித் கிறிஸ்மஸ் தாத்தாக்களை வலம் வரச் செய்தது குறிப்பிடும்செய்தி.

## நினைவு நாள்

| | |
|---|---|
| **டிசம்பர் 25:** | கீழ்வெண்மணியில் கொல்லப்பட்ட 44 தலித் தியாகிகளுக்கு வீரவணக்கம் |
| **டிசம்பர் 26:** | சுனாமியால் இறந்த அனைவருக்கும் அஞ்சலி. பாதிக்கப்பட்டோருக்கு தோழமையை வெளிப்படுத்துவோம். இயற்கையை மதித்து நடக்க முயல்வோம். பேணி காப்போம். |

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## தொழிலாளர் பணியகம்

டிசம்பர் மாத மாதாந்திர கூட்டம் டிசம்பர் 19 ம் தேதி ராஜாஜி நகர் பங்கில் நடைபெற்றது. சுமார் 18 நபர்கள் கலந்து கொண்டனர். மற்ற எல்லா பங்கு உறுப்பினர்களையும் அந்தந்த பங்குத்தந்தையர்கள் ஊக்குவிப்பது அவசியமாகிறது.

### 2011 ம் ஆண்டு ஜனவரியில்

- ஜனவரி 16 ம் தேதி ஞாயிறு திருப்பலியை "உலக புலம்பெயர்ந்தோர்" நாளாக சிறப்பிக்க அகில இந்தி ஆயர் பேரவை தொழிலாளர் பணியகத்தின் தலைவர் ஆயர் மேதகு லூயில் ஒஸ்வால்ட் அவர்கள் திருத்தந்தையின் பேரில் அழைப்பு விடுக்கிறார்.

- ஜனவரி 16 ம் தேதி தாம்பரம் பங்கில் மாதாந்திர கூட்டம் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.
- ஜனவரி 30 ம் தேதி **"திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்"** மடிப்பாக்கம் பங்கில் நடைபெற உள்ளது. இதில் கிறித்தவ தொழிலாளர் பணியகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள். கட்டணம் ரூ. 100/- கச்சா பொருள் செலவுக்காக கட்டாயம் எடுத்து வரவேண்டும்.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## நற்செய்தி அறிவிப்பு பணியகம்

- டிசம்பர் 4 ம் தேதி மற்றும் 5 ம் தேதிகளில் கருத்தரங்கமும் - தியானமும் கிறிஸ்து பிறப்பு விழாவும் கொண்டாடப்பட்டது. நமது ஆயர் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தும், பரிசும் வழங்கினார். மாநில செயலர் அருட்பணி. மைக்கேல் செல்வராஜ் சிறப்பாக வழிநடத்தினார்.
- நற்செய்தி பணியாளர்கள் 46 நபர்கள் கலந்து கொண்டனர். மறைபரப்பு நிதியாக ரூ.3490/- காணிக்கை அளித்தனர்.
- ஜனவரி 9 ம் தேதி மாதாந்திர கூட்டம் தாம்பரம் பங்கில் நடைபெற உள்ளது.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## மரியாயின் சேனை செய்தி

செங்கை மறைமாவட்ட ஆயர் **மேதகு நீதிநாதன்** அவர்களின் நல்லாசியுடனும், மறைமாவட்ட மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களின் பெருமுயற்சியாலும், மகாபலிபுரம் பங்குத்தந்தையும் கோவளம் மறைவட்ட முதன்மைகுருவுமான அருட்பணி. சார்லஸ் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், அம்மறைவட்ட அனைத்து பங்குத்தந்தையர்களின் ஒத்துழைப்புடனும் டிசம்பர் 18 ம் தேதி மகாபலிபுரம் பங்கினை மையப்படுத்தி கியூரியா ஆரம்பிக்கப்பட்டது. மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் முன்னிலை வகித்து





புதிய அலுவலர்களுக்கான தேர்தலை நடத்தி அவர்களுக்கு பொறுப்புகளை ஒப்படைத்தார். மகாபலிபுரம் பங்குத்தந்தையும் அக்கியூரியாவின் ஆன்ம குருவுமாகிய அருட்பணி. சார்லஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கி பொறுப்பேற்றார்கள். முட்டுக்காடு பங்குத்தந்தை அருட்பணி. தாமஸ் பிரேம்குமார் அவர்கள் வாழ்த்துரையில் மரியாயின் சேனை பணிகள் குறித்து பாராட்டினார்கள். புதியதாக பொறுப்பேற்ற கியூரியா தலைவர் சகோதரர். லாசர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இவ்விழா அனைத்தையும் வழிநடத்திய கொமித்சிய துணைத்தலைவர் வின்சென்ட பால்ராஜ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**திரு. அந்தோணிசாமி**
**செயலர்**

## இளையோர் பணியகம்

- நவம்பர் 21 ம் தேதி பாப்பநல்லூர் பங்கின் கிளைப்பங்கான பண்ரூட்டி, தூய சகாய அன்னை ஆலயத்தில் இளைஞர்களை செயலர் தந்தை அவர்கள் சந்தித்து இயக்கத்தை துவங்கி வைத்தார். ஏற்பாடு செய்த பங்குத்தந்தை அருட்பணி. சாலமன் அவர்களுக்கு நன்றி.
- நவம்பர் 28 ம் தேதி புனித பிரான்சிஸ் அசிசியார் ஆலயம், வாலாஜாபாத் பங்கு இளைஞர்களை இளையோர் பணியகத்தின் முழுநேர பணியாளர் மற்றும் அருட்சகோதரரும் சென்று சந்தித்தனர். இளைஞர்கள் தங்களது செயல்பாடுகளைப் பற்றியும், மறைமாவட்ட அளவிலான நிகழ்வுகளைப் பற்றியும் ஆலோசித்தனர்.
- நவம்பர் 28 ம் தேதி அனைத்து தலைவர் மற்றும் செயலர்களுக்கான பொதுக்குழுக் கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்தில் அவரவர் பங்குகளில் இளைஞர் ஆண்டின் செயல்பாடுகள் பற்றியும் தலைவர்கள் பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து செயலர் தந்தை அவர்கள் இளைஞர் விழா (Youth Feast) பற்றியும், மிகக் குறிப்பாக ஜனவரி மாதம் 30 ம் தேதி சென்னையில் நடைபெறவிருக்கின்ற மாநில மாநாடு பற்றியும் விவரித்தார்.
- டிசம்பர் 1 ம் தேதி தாம்பரம் மறைவட்டத்தில் உலக எய்ட்ஸ் தினம் கொண்டாடப்பட்டது.

டிசம்பர் 5 ம் தேதி இளைஞர்களுக்கான கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டியானது நடைபெற்றது. அதில் 9 பங்குகளிலிருந்து 125 இளைஞர்கள் கலந்துகொண்டனர். அனைவருமே மிகச் சிறப்பாக பாடினர். போட்டிக்கு பாடகர் சைஜீ மற்றும் அருட்சகோதரி. பிரியா ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். அவர்களுக்கு இளையோர் பணியகத்தின் சார்பாக நன்றியும், வாழ்த்துக்களும். போட்டிகளில் பங்கு பெற்றவர்களுக்கும், வெற்றிப்பெற்றவர்களுக்கும் அவர்களை ஊக்குவித்து அனுப்பி வைத்த அனைத்து பங்குத்தந்தையர்களுக்கும், உதவி பங்குத் தந்தையர்களுக்கும் இளையோர் பணியகத்தின் சார்பாக நன்றியும், பாராட்டுகளும்.

## முக்கிய அறிவிப்புகள்

தமிழர் திருநாளான பொங்கல் விழாவை முன்னிட்டு மறைமாவட்ட அளவில் ஆண்களுக்கான கைப்பந்து போட்டியும், பெண்களுக்கான பந்து எரிதல் போட்டியும் நடைபெறவிருக்கின்றது. எனவே அருட்பணியாளர்கள் தங்கள் பங்கு இளைஞர்களை அனுப்பி வைத்து அன்றைய நாளை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நாள்:** 09.01.2011

**இடம்:** மறைமாவட்ட இளையோர் பணியகம், மெல்ரோசாபுரம்

## ஒரு லட்சம் கத்தோலிக்க இளம் தலைவர்கள் ஒன்று கூடும் மாநில மாநாடு

**நாள்:** 30.01.2011

**இடம்:** செயின்ட் பீட்ஸ் விளையாட்டு மைதானம், சந்தோம், சென்னை - 600 004

அருட்தந்தையர்கள் தங்கள் பங்கு இளைஞர்களையும், மக்களையும் இம்மாநாட்டில் கலந்துகொள்ள அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## இ.கி.மா / இ.மா இயக்கம்

### மறைமாவட்ட அளவில்

நவம்பர் 26 ம் தேதி காலை 11.00 மணியளவில் இ.கி.மா/இ.மா இயக்கத்தின்





நிறுவனர் விழா கொண்டாட்டம் மற்றும் மாணவ மாணவிகளுக்கான பாடல், கட்டுரை, கவிதை, ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டி நடைபெற்றது. இதில் 17 பள்ளிகளிலிருந்து 67 மாணவ மாணவியரும் 20 வழிகாட்டி ஆசிரிய, ஆசிரியைகளும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டு மகிழ்ந்தனர். இறுதியில் மாணவ மாணவியரின் திறமைகளின் வெளிச்சமான கலை நிகழ்ச்சிகளும், அதனைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன், மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அவர்கள் வருகை தந்து மாணவ மாணவியரை ஊக்குவித்தார். இறுதியாக இயக்குநர் தந்தை அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ் அவர்களின் உரையுடன் இ.கி.மா/இ.மா இயக்கத்தின் நிறுவனர் விழா கொண்டாட்டம் நிறைவு பெற்றது.

**அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ்**
**செயலர்**

## A CHATHOLIC CABLE TV CHANNEL ON ANVIL

A Catholic Cable TV channel is to be launched in Tambaram neighbourhood shortly, is an initiative of the Claretians in partnership with the Priests, Laity and Religious of the neighbourhood. The need for a channel has been discerned as a real need because of the numerous Catholic viewers and the dearth of a Catholic channel.

An executive committee consisting of Fr.A.Arul Raj (Vicar Forane), Fr.S.Vincent Anesthasiar,cmf (Provincial, Claretian Province of Chennai), Fr.Christian (Parish Priest, Kolapakkam), Fr.V.Michael Francis,cmf (Director, Claretian Communication), Fr.M.John Kurian (Parish Priest, Mudichur), Fr.Alexis Manohar (Parish Priest, Guduvancherry) and Fr.Albert Leenus (Parish Priest, Rajaji Nager) is working on the project.

The channel christened as MADHA TV plans to offer programs related to the Bible, Teachings of the Church, Celebration of Sacraments, Justice - Peace and Integrity of Creation etc. We as a Catholic community shall welcome this evangelising effort and render whole hearted support.

**Rev. Fr. V. Michael Francis,cmf**
**Director**

# FROM THE PROCURATOR'S DESK

## SCHOLARSHIPS ISSUED FOR THE ACADEMIC YEAR 2010 - 2011

Scholarship issued up to November 2010 **Rs.9,70,000/-**

**(December 2010)**

**B. E.**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 53 | 383 | Stanely Sebastian L. ® | Karumbakkam | 5000.00 |
| | | | **TOTAL** | **Rs. 5,000.00** |

**DTE**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 47 | 116 | Clara Rubi A. ® | Reddipalayam | 5000.00 |
| | | | **TOTAL** | **Rs. 5,000.00** |

**M. Phil**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 084 | Mohanraj K. ® | Vippedu | 5000.00 |
| | | | **TOTAL** | **Rs. 5,000.00** |

**UG**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 110 | 044 | Arokiaraj C. (N) | Valan Nagar | 2000.00 |
| | | | **TOTAL** | **Rs. 2,000.00** |

**GRAND TOTAL** **Rs. 17,000.00**

**Grand Total of all the Scholarships Rs.9,87,000/-**

(N) New, (R) Renewal

**Rev. Fr. N. Louis Rayar**
Chancellor

**Rev. Fr. P. Charles**
Procurator

## SURPLUS MASSES

**December 2010**

| | |
|---|---|
| Parish Priest, Palavakkam | 19,700.00 |
| Parish Priest, Old Perungalathur | 5,000.00 |
| Parish Priest, Chingleput | 3,000.00 |





## SEMINARIANS' FUND

**December 2010**

| | |
|---|---|
| Mrs. Fatima, Neerpair | 500.00 |
| Parish Priest, Neerpair | 500.00 |
| Cescili Anpiam, Alandur | 3,000.00 |
| Mr. S. M. Lourdu Samy, Madurantagam | 600.00 |
| Mr. Amalraj Sundaram, Maraimalai Nagar | 500.00 |
| Society of St. Vincent De Paul, Chingleput | 2,000.00 |
| Mr. M. S. Abraham, Chennai | 200.00 |
| Mrs. Josephine Rita, Chingleput | 1,500.00 |
| Mr. Bernard and Family, Chingleput | 1,500.00 |
| Ms. Violet Jacob, Chingleput | 1,500.00 |
| Cheyyur Vicariate | 4,000.00 |
| Ms. N. Vimala, Chennai | 6,000.00 |
| Parish Priest, Tambaram | 1,25,000.00 |
| Mr. Magimai Doss, Tambaram | 12,000.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**December 2010**

| | |
|---|---|
| Parish Priest, Thuraipakkam | 15,000.00 |
| Mr. Antony Francis, Chennai | 200.00 |
| Diocesan Catechists | 3,000.00 |
| Parish Priest, Neerpair | 1,000.00 |
| Parish Priest, Palavakkam | 10,000.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**

## MARRIAGE QUARTERLY RETURNS

Parish Priests are kindly requested to send to the Chancellor, the Marriage Quarterly Returns for the IV quarter i.e. October to December 2010 as early as possible. Those who are yet to submit the other three quarters (January to September) are reminded to send them at the earliest.

## OFFICIAL NOTIFICATIONS

| | |
|---|---|
| 01.01.2011 | B.V. Mary, Mother of God - Solemnity |
| 15.01.2011 | Pongal - **HOLIDAY FOR THE CURIA** |
| 25.01.2011 | Conversion of St. Paul Ap. Feast |
| 26.01.2011 | Republic Day - **HOLIDAY FOR THE CURIA** |

**The Chancellor**

# JEEVAN JOTHI MAHAL, RAMAPURAM





The newly built Jeevan Jothi Mahal was blessed and opened by our beloved Bishop **Rt. Rev. Dr. A. Neethinathan** on 8th December, 2010. We appreciate Rev. Fr. A. Martin Joseph and the Parishoners of Ramapuram for their zeal and enthusiasm.

---

## *PRAYERFUL WISHES FOR A HAPPY BIRTHDAY*



| | |
|---|---|
| Fr. Tony Bharath | 02.01.1976 |
| Fr. Michael Raj | 04.01.1972 |
| Fr. Sebastian George | 19.01.1974 |

## ORDINATION ANNIVERSAI

| | |
|---|---|
| Fr. Patrick | 30-01-197 |



*Congratulations and prayerful Wishes*





# புனித தோமையார் மலை

## தேசிய திருத்தலம்

பழமையும் பாரம்பரிய பெருமையும் வரலாற்று சிறப்பும் ஒருங்கே அமைந்த தூய தோமா திருமலை தேசிய திருத்தலமாகியுள்ளது. “**வாருங்கள் நாமும் போய் அவரோடு மரிப்போம்**”என்று இயேசுவின் அன்புக்கு விசுவாசம் காட்டிய தூய தோமா “**கண்டு விசுவசிப்பதை விட காணாமல் விசுவசிப்போர் பேறு பெற்றோர்**” என்ற இறைவார்த்தையை உறுதிபடுத்த பல்லாயிரம் மைல் தூரம் கடந்து வந்து இந்திய மண்ணில் விசுவாச விதை விதைத்த திருப்பணிக்கு சான்று கூறி நிமிர்ந்து நிற்க்கும் புனித மலை இத்தோமையார் திருமலை. இது கிறிஸ்தவ விசுவாசத்தின் சின்னம். இந்திய திருச்சபையின் அடையாளம். இத்திருத்தலம் தேசிய திருத்தலமாக உருவாகியிருக்கும் இத்தருணத்தில் இதன் வரலாற்றை சற்று திரும்பி பார்ப்போம்.

ஆண்டவர் இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமையார் நற்செய்தியை அறிவிக்க கி.பி. 52 ல் இந்தியா வந்தார். அப்பொழுது மயிலை என அழைக்கப்பட்ட இன்றைய சென்னை நகரில் இயேசுவின் போதனைகளை மிகுந்த ஆர்வத்தோடு போதித்து வந்தார். இதன் காரணமாக பல்வேறு இன்னல்களையும், ஆபத்துகளையும் வேதனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இறுதியாக இப்புனித மலையில் கி.பி. 72 ல் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி மறைசாட்சியானார்.

இயேசுவின் நற்செய்தியை எழுதியவர்களில் ஒருவரான புனித லூக்காவால் வரையப்பட்ட குழந்தை இயேசுவை கரங்களில் ஏந்திய அன்னை மரியாளின் படத்தை புனித தோமா இந்தியாவிற்கு வரும் போது கொண்டு வந்தார். இப்படம் தான் அன்னை மரியாவிற்கென்று வரையப்பட்ட முதல் ஓவியம். போர்த்துக்கீசியர் வரும் முன்னமே இங்கு ஒரு ஆலயம் கவனிப்பாரற்று மிகவும் சேதமடைந்த நிலையில் இருந்தது. புதிய ஆலயம் கட்டுவதற்கு இவ்விடத்தை தோண்டியபோது அந்த ஓவியம் கண்டெடுக்கப்பட்டது.

அதே போலவே புனித தோமையாரால் செதுக்கப்பட்ட கற்சிலுவையும் கண்டெடுக்கப்பட்டது. அவர் ஒரு சிலுவையை செதுக்கி அதன் முன் அமர்ந்து செபிப்பார் என்ற பாரம்பரியச் செய்தியை வரலாற்று பூர்வமாக எண்பிக்க இது பெரிதும் உதவியது. இக்கற்சிலுவை தூய தோமாவின் இரத்தம் சிந்தும் கற்சிலுவை என்று அழைக்கப்படுகிறது. கி.பி. 1551 முதல் கி.பி. 1704 வரை டிசம்பர் மாதம் 18 ம் தேதியன்று (இயேசுவை எதிர் நோக்கிய அன்னை திருவிழா) இக்கற்சிலுவையில் இருந்து இரத்தம் வழிந்தது. எனவே